★ ஆட்சி செய்யும் ஆற்றல் இல்லையா? ★

Phone: No. 4502 Regd: No. M. 5458

விலை அரை அணா இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 28—12—50 | மணி 26

# இடத்தைவிட்டு அகலுங்கள்!

—(:0:)—

## மழையில்லை என்று கூறி மரத்தைநடும்பேர்வழிகள்

—0—

### விஞ்ஞான காலத்தில் நம் நாட்டு விசித்திரப் பிறவிகள்

—(0)—

### தோழர் ஈ. வே. கி. சம்பத் சொற்பொழிவு

(நமது தனி நிருபர்)

காஞ்சிபுரம், டிச. 24—

"ஆங்கிலேயன் இருக்கும் இடத்தில் எங்களை உட்காரவையுங்கள்; பின்னர்ப் பாருங்கள் நாட்டு நடப்பை என்று வீராப்புப் பேசினவர்கள், சுதந்திரம் கிடைத்துவிட்டால் தெருவெல்லாம் பாலும், தேனும் பெருக்கெடுத்து ஓடும் என்று தம்பட்டமடித்தவர்கள், இன்று மக்களைப் பார்த்து வெளிநாட்டிலிருந்து உணவுப்பொருள்களை இறக்குமதிசெய்ய முடியவில்லை. பருவ மழை நம்மை மோசம் செய்துவிட்டது. ஆகவே பாரதபுத்திரர்களே புளியங்கொட்டையையும், புண்ணாக்கையும் தின்னப் பழகுங்கள் என்று பேசத் தலைப்பட்டுவிட்டனர், ஆட்சிசெய்ய தைரியமிருந்தால் ஆளுங்கள் இல்லையேல் அந்த இடத்தை விட்டு அகலுங்கள் என்று கூறுகிறோம் நாம்" என்று தோழர் ஈ. வே. கி. சம்பத் காஞ்சிபுரம் தி. மு. க. மாநாட்டில் சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு இன்று பிற்பகல் 3-30 மணிக்கு மீண்டும் துவங்கியது. பல தோழர்கள் இயக்கப் பாடல்களைப் பாடிய பின், தோழர் ஈ. வே. கி. சம்பத் பேசியதன் சாரம் வருமாறு:

உணவில்லையே என்று ஆளவந்தார்களைக் கேட்டால் மழை இல்லையே என்கிறார்கள், அவர்கள் ஏன் மழை இல்லை என்றால், மரம் இல்லை ஆகவே மழை இல்லை நாடு பூராவும் மரங்களை நடுங்கள் என்கிறார்கள். நாம் கேள்விப்பட்டதெல்லாம் செடிகளை நடுவதும், விதைகளை நடுவதும்தான். ஆனால் இந்த விசித்திரப் பிறவிகள் மரங்களையே நடுங்கள் என்கிறார்கள். இதன் முடிவு என்ன ஆகுமோ தெரியவில்லை.

#### பள்ளிகள் வேண்டும்

இன்றுள்ள மந்திரிகளை அழைத்து வந்து அவர்களுக்கு விருந்து வைத்து, அதன் பிறகு அவர்களுக்கு வாசித்தளிக்கப்படும் உபசாரப் பத்திரத்தில் அவர்களைப் பற்றிப் புகழ்ந்து விட்டு, கடைசி பாராவில், "ஆகவே எங்கள் ஊரில் பள்ளிக்கூடம் தேவை" என்று சொல்லிப் பாருங்கள். அமைச்சர் என்ன சொல்வார் என்பது தெரியும். இதெல்லாம் நீங்கள் என்னிடம்கேட்கலாமா? நீங்களே முடித்துவிட்டுத் திறப்புவிழாவிற்கு என்னை அழையுங்கள் என்றுதான் கூறுவாரே தவிர, பள்ளிக்கூடம் தேவை என்ற எண்ணம் அப்போது அவருக்குத் தோன்றாது. மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்து தர முடியாத இந்த சர்க்கார் இருந்து என்ன பிரயோசனம் என்று கேட்கிறேன். ஆனால் இந்த சர்க்கார் மக்களிடமிருந்து வரி வசூல் செய்வதில் மட்டும் தவறுவதில்லை. இது போன்ற ஆட்சியில் மக்கள் எத்தனை

(4-ம் பக்கம் பார்க்க)

# மந்திரியாரே சூத்திரப்பட்டம் ஒழிந்தீரா?

—(0)—

## ஆரியத்திமிரை அடக்கியது திராவிட இயக்கமன்றோ?

—(0)—

### பெண்கள் நிலை பற்றி மூதாட்டி இராமாமிருதத்தம்மையார்

அடுத்தபடியாக மூதாட்டி இராமாமிருதத்தம்மையார் 'பெண்கள்நிலை' என்பது பற்றி பேசினார். அதன் சாரம் வருமாறு:— "நான், காஞ்சியில் வகுப்புரிமை மாநாடு நடைபெற்றது முதற்கொண்டு சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டுச் சேவை செய்து வருகிறேன். எனக்கு வயது சென்றுவிட்டது. என்னை இந்த காங்கிரஸ்காரர்கள் சுயநலத்திற்காக இக்கட்சியில் வேலை செய்வதாகக் கூறித் திரிகின்றார்கள். எனக்கு இனி என்ன வேண்டும். நானோ வயது சென்ற கிழவி. எதாவது மந்திரி பதவி வேண்டுமென்று ஆசைப்பட்டேனா? எதற்காக என்னை சொல்லுகிறார்கள் சுயநலக்காரி என்று. அதுமட்டுமல்ல, சரோஜினி வரதப்பன் என்ற பெண் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக் கட்டப் போவதாகப் பேசியதாம். அப்பெண்ணுக்கு நான் கூறுகிறேன். அப்பெண் மந்திரி பக்தவத்சலம் மகள் என்று கேள்விப்பட்டேன். நாங்கள் இல்லையேல் மந்திரி பக்தவத்சலம்

(2-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் நலம் கவனியாத ஆட்சி நிலைக்குமா?

—(0)—

## இலங்கை செய்வதை இந்தியா செய்யமுடியாதா?

—(0)—

### ஆட்சியாளர்கள் வீண் பண விரயம்

—0—

### விவசாய நிலைமைபற்றித் தோழர் என். எஸ். இளங்கோ

காஞ்சிபுரத்தில் கூடிய தி. மு. க. மாநாட்டில், அதிராம்பட்டினம் தோழர் என். எஸ். இளங்கோ "விவசாய நிலமை" என்பதுபற்றி பேசினார். அவ்வமயம் அவர் சொன்னதாவது:—

நல்ல ஆட்சிக்குத்தேவைப் படுபவை உணவு, உடை, இருக்க இடம். இவைகள் எங்கு இல்லையோ அங்கெல்லாம் புரட்சித் தீ மூண்டுதான் தீரும். ரஷ்ய நாட்டிலே, பிரான்ஸ், சைனா, ஆகிய நாடுகளிலே ஏற்பட்ட புரட்சி இதை அடிப்படையாகக் கொண்டதுதான். சைனாவிலே உணவின்றித் துடித்துக் கொண்டிருந்த மக்களுக்கு மா-சே-துங் உணவளித்தான். எனவேதான் அங்கு சியாங்கே ஷேக் ஆட்சி மறைந்துவிட்டது. அது மட்டுமல்ல, நமது அண்டை நாடு இலங்கை தனது உணவுப் பிரச்னையை நல்ல வகையில் தீர்த்துக் கொள்ள முடிந்தபோது இந்தியாவால் ஏன் அது முடியவில்லை? இது தான் சிந்தனைக்குரிய விஷயம்.

நமது நாட்டில் ஏராளமான மூலப் பொருள்கள் விளைகின்றன இவைகளை வெளி நாடுகளுக்கு அனுப்பி, அவைகளுக்குப் பதில் உணவுப் பொருள்களைப் பெறும் பண்ட மாற்று முறையை இவர்கள் செய்யவில்லை. அதனால்தான் இவ்வளவு கொடுமைகள் நிகழ்கின்றன.

#### பணம் விரயம் செய்தார்கள்

செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யத்தவறியதோடு, உணவுஉற்பத்தி செய் என்றும், மரம் நடு விழா என்றும் பல கோடிக்கணக்கான பணத்தை வீண் விரயம் செய்து வருகின்றனர். இதை உடனடியாக நிறுத்திவிட்டு, மக்களுக்குத் தேவையானதும், உணவுப் பிரச்னையைத் தீர்க்கக் கூடியதுமான நிலச் சீர்திருத்தத்தைச் செய்தாக வேண்டும். ஜமீன் ஒழிப்பிற்குப்பின் அவர்களின் நிலங்கள் எல்லாம் பெரும் - பெரும் முதலாளிகளுக்கு மாற்றப்படுகின்றன. இந்த நிலையைத் தடுத்து நிறுத்தி, அவைகளை சர்க்கார் பண்ணைகளாகமாற்றவேண்டும்

(3ம் பக்கம் பார்க்க)

மாலைமணி

சென்னை 28—12—50 வியாழக்கிழமை

# கல்விமுறை மாறவேண்டும்

"மக்கள் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் மக்களிடையே புதைந்துள்ள ஆற்றலும் ஆக்கத்திறனும் உருவாகிப்பொலிவடைய வேண்டுமானால் அவரவரும் தத்தம் சொந்த மொழியிலேயே கல்வி கறக வேண்டும். அவரவர் தாய் மொழியில் கல்வி கற்பித்தால்தான் மக்களின் உண்மை ஆற்றல் வெளிப்பட முடியும்" என்று இந்தியக் குடியரசின் தலைவர் ராஜேந்திரபிரசாத் நாகபுரி பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாச சொற்பொழிவினூடே கூறினர்.

இவ்வாறு குடியரசுத் தலைவர் என்றே ஒரு நாள் எங்கோ ஒரு பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் குறிப்பிட்டுவிட்டால் போதுமா? நாட்டிலே கல்வி நிலைமை எத்துணைச் சீர்கெட்டுவிட்டதென்பதை அறிந்து, உடனடியாக நாட்டுக் கல்வி நிலையை உயர்த்துவதற்கான வழிகளைத் தலைவர் வகுத்திருக்க வேண்டுமல்லவா?

இன்றைய நிலையில், கல்வி என்பது வெறும் நடிப்புத் திட்டமாகவே இருக்கிறது. கல்வி இன்று நம் நாட்டைப் பொறுத்தவரையில் பெரும் பொருள் செலவிட்டுப் பெற வேண்டியதாயிருப்பதால் பெரும்பாலராயுள்ள ஏழை மக்கள் கல்வியைப் பெற முடியவில்லை.

ஏழைகளுக்கென்று துவக்கப்பட்டுள்ள துவக்கக் கல்வி நிலையங்கள் வெறும் நாள் துடைப்பு நிலையங்களேயொழிய, உண்மையில் கல்வி என்பது அங்குக் காணப்படவில்லை. அதற்குக் காரணம் அரசாங்கத்தாரின் கல்வித் திட்டம் அத்துணைச் சிறப்புடையதாயிருக்கிறது.

இன்று நம் நாட்டில் மக்களிடைத் தக்க கல்வியறிவு பரவாமைக்கு, 1. பெரும்பொருள் செலவிட வேண்டியிருப்பது, 2. மக்கள் வாழுமிடங்களில் கல்வி நிலையங்கள் போதிய அளவு இல்லாமலிருப்பது; 3. எட்டாண்டுகள் படித்தாலும் போதிய அறிவு பெறுவதற்கேற்றவாறு கல்வித் திட்டம் குறைபாடுகளாயிருப்பது, 4. மக்கள் அறிவை வளர்க்கும் திட்டத்தைவிட்டு, இந்தி, தக்ளியில் நூல் நூற்றல் போன்ற உதவாக்கரைத்திட்டங்களை அரசியல் நோக்கத்துடன் கல்வி நிலையங்களில் நுழைத்திருப்பது: 5, குறைந்த ஊதியம் பெறுபவர்களாக ஆசிரியர்களிருப்பதால் அக்கறையின்றிக் கிடப்பது ஆக இக்குறைபாடுகள் நம் நாட்டுக் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன.

நாட்டிலே மக்கள் பகுத்தறிவுடன் கூடிய கல்வியறிவு பெற்றவர்களாய் விளங்க வேண்டுமானால் இப்போதைய கல்வி முறையை அடியோடு மாற்றி, பத்தாண்டுகளில் மாணவர்கள், நல்வாழ்வு வாழுவதற்குரிய முழுத் திறமையுடையவர்களாக ஆக்கப்படுவதற்குரிய திட்டம் வகுக்க வேண்டும்.

மாணவர்களுடைய திறன்களுக்கேற்ப அவ்வத் துறையில் அவர்களை அறிவுபெறச் செய்தல் வேண்டும். கணக்கு வராத மாணவனை, மற்றத் துறையில் அறிவுக் கூர்மை இருந்தாலும் முன்னேற முடியாதபடி தடுப்பதும், கணக்கில் சிறந்த அறிவு பெற்று, மற்றவற்றில் குறைபாடுடையவரை அதற்காக முன்னேறவொட்டாதபடி தடுப்பதுமான கல்வி திட்டம் ஒழிக்கப்பட்டு, மாணவர்கள் எவ்வெத் துறையில் அறிவுக் கூர்மையுடையவரோ அவ்வத் துறையில் அவர்கள் முன்னேற்றமடைய வழியுள்ள கல்வித் திட்டம் இருத்தல் வேண்டும்.

எவரும் எந்த வயதிலும் கல்வி பயிலவும் தேர்வுகளில் ஈடுபடவும் வசதியிருத்தல் வேண்டும். கல்விக்காக மாணவனுக்கு ஏற்படும் பணச் செலவு மிக மிகக் குறைதல் வேண்டும். கூடியவரை மருத்துவம், இஞ்சினியரிங் போன்றவற்றைத் தவிர, மற்றைக் கல்விகள் இலவசமாக இருத்தல் வேண்டும்.

உயர் நிலைப்பள்ளிகளில் இன்றிருப்பதைப் போன்ற நடிப்புக் கைத் தொழிற் கல்வி ஒழிக்கப்பட்டு உண்மையிலேயே மாணவர் பயனடையும் வகையில் கைத் தொழிற் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

இந்தி, தக்ளிக்காகப் பாழாக்கும் நேரத்தை நல்ல கைத் தொழில்களைக் கற்பிப்பதில் செலழிக்க வேண்டும். ஆசிரியர்களின் நிலையை உயர்த்த வேண்டும். இவ்வாறு குறைகளைக் களைந்து, பத்தாண்டு படிப்பில் மாணவன் தக்க கல்வியறிவும், பொது அறிவும் உடையவனாக வெளிவருமாறு செய்யவேண்டும். இவற்றைச் செய்ய, அரசாங்கம் பொது மக்கள் நலத்தில் அக்கரை கொண்டதாக இருக்க வேண்டுமே, வெறும் வாய்ச் சொல் வீரம் போதாதே! இதைக் கவனிப்பாரா குடியரசுத் தலைவர்! நம் நாட்டு அரசாங்கமேனும் கவனித்து ஆவனசெய்ய முன் வருமா! முடியுமா இங்ஙனம் திருத்தியமைக்க இன்றுள்ள அரசியலாரால்?

# காங்கிரசார் பகற்கொள்ளை

———(:0:)———

## மக்கள்மனம் திரும்புமா?

———(0(———

## நாட்டின் வறுமை நிலைக்கு தியாகிகளே காரணம்

சென்னை, டிச. 26—

இத்தனை ஆண்டுகளாக காங்கிரஸ் பொருட்காட்சி நடந்ததல்லவா? சர்க்கார் பஸ் வசதி. இன்னும் சர்க்காரின் பூரண ஒத்துழைப்புடன் நடந்த பொருட்காட்சியின் வரவு செலவு பற்றி சில மாதங்களுக்கு முன் சொற்ப கையிருப்பு காண்பிக்கப்பட்டதல்லவா? அதற்குக் காரணம் இன்று ஒரு காங்கிரஸ் தோழரால் வெளியிடப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். கக்கூஸ் கட்டுவதற்கு 41 ஆயிரம் ரூபாய். சமையல் அறை கட்ட 34 ஆயிரம். மண்போட 46 ஆயிரம். இப்பொழுது புரிகிறதா. நாம் சொன்னால் நம மீது எரிந்து விழும் தியாகிகளைக் கேட்கிறோம். இன்று நாட்டில் காங்கிரசார் மக்களை மதியற்றவர்கள் என்று நினைத்துகாட்டு ராஜா தர்பார் நடத்துகிறார்கள் என்று திராவிடர் இயக்கம் கூறி வருவது உண்மை என்பதை இப்போதாவது உணர்வீர்களா?

———

## 1950ல் விஞ்ஞான சாதனைகள்

———

அமெரிக்கா சாதித்துள்ளதின் ஜாபிதா

வாஷிங்டன், டிச. 28—

1950-ல் விஞ்ஞானத்துறையில் அமெரிக்கா சாதித்துள்ளவை குறித்து ஒரு பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதில் நீர்வாயுக்குண்டு உற்பத்தி சாதனைதான் எல்லாவற்றையும் விட முக்கியமாக இருக்கும் எனத் தெரிகிறது. பிற சாதனைகளாவன.

தொத்து வியாதிகளைத் தீர்க்கக் கூடிய டொரமிஸின் என்ற மருந்து கண்டுபிடிப்பு.

அணுசக்தியைச் சேர்த்துவைக்கும் வழிகண்டுபிடிப்பு 'லாங்ஐலண்ட்' தீவில் இதற்கான லாபரேட்டரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

டொரமிஸின் ஆரோமிஸின் மருந்துகளை மிருகங்களின் தீவனங்களுடன் சேர்த்துக்கொடுத்தால் அந்தமிருகங்கள் இரட்டிப்புப்பங்கு வளருகின்றன என்பது கண்டுபிடிப்பு.

டெலிவிஷனில் மேலும் முன்னேற்றம்.

செயற்கை மழையையும் தருவிக்க மேகங்கள் மீது ஸில்வர் அயோனட்டையும், உலர்ந்த ஐஸ்ஸையும் உபயோகித்தல்.

அட்ரெனல் கிளாண்டுகளில் உள்ள ஹார்மோன்களைக்கொண்டு மதுக்குடி ஆசையை ஒழிக்க முடியும் என்பது. புற்று நோயைக் கண்டுபிடிப்பதற்கான 'பிளட் டெஸ்ட்' முறை கண்டுபிடிப்பு.

நீர்வாயுக்குண்டுக்குத் தேவையான ட்ரைடியம் ஜலத்தில் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தது.

மெகானிகல் ஹிருதய சுவாசப் பைகள் கண்டுபிடிப்பு.

அதிககாலம் உயிர்வாழக்கூடியதற்கான கோர்டிஸான் மருந்து மற்றும் ஏ. ஸி. டி. எச். ஆகிய மருந்துகள் கண்டுபிடிப்பு.

## மந்திரியாரே . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி).

இன்னும்கூட சூத்திரன், தேவடியாள் மகன் என்றுதானே ஆரியர்களால் அழைக்கப்படுவார். எங்கள் பிரசாரம் இருந்து வருவதால்தான் ஆரியர்கள் கொஞ்சம் தங்கள் வாய்த் துடுக்கை நிறுத்தியுள்ளனர்.

ஆகவே நீங்கள் மானத்தோடு வாழத்தான் நாங்கள் அறிவுப் பிரசாரம் செய்கிறோம். எங்களை ஏனம்மா ஒழித்துக் கட்ட ஆசைப்படுகிறாய்?

### மாதர் சங்கம் வேண்டும்

ஊருக்கு-ஊர், வீட்டிற்குவீடு, மாதர் சங்கங்கள் தோன்ற வேண்டும். இதற்கான முயற்சியில் நான் ஈடுபட்டுள்ளேன். கூடிய விரைவில் மாதர்களுக்கு நல்லதோர் திட்டம் தருவேன் அதைக்கொண்டு நமது பெண்கள் நாட்டு முன்னேற்றத்திற்குக் கொஞ்சம் பாடுபட வேண்டும்."

## கரந்தை ஏ. கே. வேலன்

"காவிரிப்பூம் பட்டினம், முசிரி, வஞ்சிமாநகரம், பழையாறு, கங்கை கொண்ட சோழநகரம், ஆகிய இவை உருத்தெரியாமல் மறைந்து விட்டன. மதுரை மாநகரம் ஒரு தடவை மறைந்து, ஒரு தடவை எரிந்து, இன்று மீண்டும் தலை தூக்கி நிற்கிறது என்றால், சங்ககால நகரம், சரித்திரக் கால நகரமாக காஞ்சிதான் இன்று காட்சியளிக்கிறது. அன்று சரித்திர காலந்தொட்டு, இன்று அண்ணா காலம் வரை மாற்றுக் குறையாமல் இருக்கிறது.

ஒரு காலத்தில் வெளி நாடுகளில் வெற்றி வீரனாக உலவிய தமிழன் இன்று வெளி நாடுகளிலே கூலியாகவும், வண்டி இழுப்பவனாகவும் இருக்கிறான். தமிழன் நாடு சரித்திரப் பிரசித்திப் பெற்றது. அசோகனால் ஆள முடியாது விடப்பட்டது. மற்றும் தமிழனின் வீரமெல்லாம் இன்று எங்கே மறைந்தது. சரித்திரத்திலே தமிழனின் புகழ் எழுதப்பட்டுள்ளது. அவ்வளவுசீரும்-சிறப்பும் பெற்ற தமிழ் நாடு இன்று சீரழிந்து விட்டது இதைப் போக்க நாமும் முயலவேண்டும்" என்று "சரித்திரத்தில் நாம்" என்பதுபற்றி பேசும்போது கரந்தைத் தோழர் ஏ. கே. வேலன் சொன்னார்.

———

## பகுத்தறிவு வாசகசாலை

செம்பியம் மார்க்கட் தெரு எண் 7ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நேரம் காலை 6 முதல் 9 வரை மாலை 5 முதல் 9 வரை திறந்திருக்கும்.

# தேசபக்தியா? பணபக்தியா?

……………(ஃ)……………

## பொது மக்கள் பணம் மனம்போல் செலவாகிறது

…………(0)…………

### அமைச்சர்களின் அரசபோகம்

புதுடில்லி, டிச. 25—

1950-ம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் ஒவ்வொருவரும் சற்றேறக்குறைய 2½ லட்சம் ரூபாய் பெற்றிருக்கின்றனர். அதாவது சம்பளம், வீட்டுப்படி, பிரயாணப்படி, மற்றப் படிகளாகியவை அனைத்தும் சேர்த்து மாதமொன்றுக்கு ஒரு மந்திரி பெறும் பணம் ரூ. 20,800 ஆகும்.

இங்குக்கொடுக்கப்பட்டதொகை கூட முடிவானதென்று கூறி விட முடியாது. ஏனெனில், இன்னும் சில செலவினங்களுக்குரிய கணக்குகள் வந்து சேரவில்லை. இவைகள் அனைத்தும் சரியானபடி கணக்கில் வந்துவிட்டால் இந்தத் தொகை இன்னும் அதிகமாகலாம்.

ஆனால், ஓர் அமைச்சருக்கு ஓர் ஆண்டுக்கு 2½ லட்சம் ரூபாய் செலவாகிறதென்றால் நம் நாட்டுநிலைமையில், தேச பக்தர்கள் ஆட்சி எவ்வண்ணம் நடைபெறுகிறதென்பதைப் பொது மக்கள்தான் உணர வேண்டும்.

வெளியே பொது மக்களிடம் காங்கிரஸ் அமைச்சர்கள் பணமே வேண்டாத பத்தினிகள் போலப் பேசுவதும், பணத்தைவிட நாட்டு உயர்வே பெரிதெனக் கூறுவதுமாக இருப்பதும், பதவியிலமர்ந்தவுடன், இதுவரை வேறெந்த அரசாங்கத்திலும் நடந்திராத அளவுக்கு ஒவ்வோர் அமைச்சரும் பொது மக்கள் பணத்தைச் செலவிட்டுக்கொண்டு திரிவது என்றால், இத்தகையவர்கள் ஆட்சி எப்படியிருக்கும் என்பதை விளக்கவா வேண்டும்! பொது மக்கள் ஓர் அமைச்சர் ஓரே ஆண்டில் பொது மக்கள் பணத்தில் 2½ லட்சம் ரூபாயை விழுங்கிவிடுகிறார் என்பது கூட ஒருவகையில் மன்னிக்கக் கூடியதென்று வைத்துக் கொண்டாலும், இவ்வளவு பணத்தையும் பெற்றுக் கொள்ளும் இந்த அமைச்சர்கள், நிர்வாகம் செய்யத் தெரியாமல் ஊழல்களுடன் கூடிய நிர்வாகத்தைச் செய்துவருவதாலும், அறியாமையினாலும் திறமைக் குறைவினாலும், சுய நலத்தினாலும் நாட்டுக்கு உண்டாக்கும் மகத்தான தீமைகள் இருக்கின்றனவே இவை சற்றும் மன்னிக்கக் கூடாத பெருங்குற்றங்களாகவே இருக்கின்றன.

ஆனால் மேனாடுகளைப்போன்று பொதுமக்கள் இவற்றையெல்லாம் உணர்ந்து, இந்த அமைச்சர்களைக் கண்டித்து, இவர்களைப் பதவியை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தக் கூடியவாறு தங்கள் உரிமையை நிலை நாட்டும் ஆற்றலும் உணர்ச்சியும் பெற்றில்லை என்பதைக் காங்கிரஸ்காரர்கள் நன்குணர்ந்தவர்களாதலின், அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் தங்கள் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

நிர்வாகத்தில் இத்தகைய வெள்ளை யானைகள் இருந்து மக்கள் பணத்தை விழுங்கி, மக்களை என்றும் வறுமையில் ஆழ்த்திக் கொண்டிருக்கும் நிலையைப் பொது மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

---

### தோழர் இராஜகோபாலாச்சாரி உள்நாட்டு மந்திரியானார்

சர்தார் வல்லபாய்படேல் மறைவின் காரணமாக அவர் வகித்து வந்த பதவிகள் இரண்டனுள், ஒன்றாகிய உள்நாட்டிலாக்கா மந்திரி பதவி, தோழர் சி. இராஜகோபாலாச்சாரி வசமளிக்கப்பட்டது. அவர் இனி உள் நாட்டு மந்திரியாக இருப்பார். மற்றொரு பதவியாகிய மாகாண அரசாங்கங்கள் பற்றிய இலாக்கா. முன்னரே மந்திரியாயிருந்த தோழர் என். கோபாலசாமி ஐயங்கார் வசம் ஒதுக்கப்பட்டது.

---

வெள்ளிக் காசுக்காக, சொந்தக் கட்சியின் திட்டத்தைக் குலைக்கவும், ஏழை எளியோருக்குத் துரோகம் இழைக்கவும், சிலர் துணிகிறார்கள். அவர்களே நாட்டு மக்களுக்குப் பிரதிநிதிகள்—எம். எல். ஏ.க்கள்!!

—அறிஞர்-அண்ணா

---

## கர்ப்பத்தடையால் மக்கள் ஒழுக்க நிலை கெடாது

——(0)——

### மத்ய சர்க்கார் பொருளாதார ஆலோசகர்

அலிகார், டிச. 26—

இந்திய பொருளாதார சங்கத்தின் 33-வது மாநாட்டை வர்த்தக அமைச்சர் தோழர் பிரகாசா துவக்கி வைத்தார்.

பொருளாதார நிபுணர்கள் நல்ல ஆலோசனை ஏதாவது வெளியிட்டால் அதைக்கொண்டு சர்க்கார் கொள்கைகளை வகுத்துக்கொள்ள முடியுமென நிதி அமைச்சர் தேஷ்முக் மாநாட்டுக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் தொகை அளவு குறைந்தால்தான் எத்துறையிலும் திட்டங்கள் முன்னேற்றமடையும். இந்நாட்டில் 1971-க்குள் மக்கள் தொகை அளவை நிலைப்படுத்திக் கொள்ளவேண்டும். ஏராளமாக கர்ப்பத்தடைச் சாதனங்களைப் பயன் படுத்திக் கொள்வது நல்லது. இதுமட்டில் சர்க்கார் ஆராய்ச்சிகள் நடத்தவும் ஏற்பாடு செய்யவேண்டும். இத்தகைய செயற்கை சாதனங்களினால் மக்களின் ஒழுக்க நிலை கெட்டுவிடுமென அஞ்சவேண்டாம் என இந்திய சர்க்கார் பொருளாதார ஆலோசகர் டாக்டர் க்யான்சந்த் கூறினார்.

அண்ணாமலை பல்கலைக் கழக மக்கட் தொகை ஆராய்ச்சிக் கழக டைரக்டர் டாக்டர் என். சந்திரசேகரும் தோழர் க்யான்சந்தின் ஆலோசனையை ஆதரித்தார். மேலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த குடும்ப ரீதியாக திட்டம் தயாரிப்பது மிக்க அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

## "எதிர்ப்பு முன்னணி"

நல்லதொரு விந்தை நான்கண்டேன் தாரணியில்
சொல்லவா சொல்லவா சொல்லவா—நல்ல
புலியழிக்க முடியாத பொன்னான கொள்கையினை
எலியழிக்கத் தான் துணிந்த தே!

*பாரதியே தோற்றார்; பாவாணர் மெய்சிலிர்த்தார்
பேரறிஞர் 'தம்செயலே பிழை'யென்றார்—மாரடிக்கும்
கூலிகளெல் லாங்கூடி கோணல் வழிதேடி
காலித் தனஞ்செய்தல் காண்!

கல்லால் அடிபட்டும் காலால் மிதிபட்டும்
சொல்லால் அடிபட்டும் சோராமல்—நல்லார்
'சரி'என்று ஏற்கச் சாற்றினோம்! மாக்கொள்கை
நரிகொன்று சாமோ நவில்!

கடைபோட்டார்! 'நற்கொள்கை கா' ணென்று கூறினார்
நடைபோட்டு மக்கள் நழுவினார்—கடைமூடி
தலைசாய்ந்து தமிழாட்சி தருந்தீர சூரர்கள்
விலைபோந்த தென்சொல்லு வேன்!

—கண்ணதாசன்

*பாரதியே—சோமசுந்தர பாரதியார்

---

### திராவிடர்கள் அனைவரும் ஓட்டராகுங்கள்

ஜனவரி 15 கடைசிநாள்

21-வயது முடிந்த திராவிட ஆண் பெண்கள் அனைவரும் ஓட்டர்களாகிவிட வேண்டும். முன்னரே ஆகியிராவிட்டால் இப்போதே ஓட்டர்களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர்கள் இருக்கின்றனவாவென்பதைப் பார்த்து, இல்லாவிட்டால் உடனே சேர்க்க முயலுங்கள். வாக்காளராயிருப்பதுதான் நாட்டுரிமையுடன் வாழுவதாகும்.

---

### மக்கள் நலம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இனாம் நிலங்களையும் இது போன்று சர்க்கார் பண்ணைகளில் சேர்த்துவிட்டால், இப்பண்ணைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து இனாம்தாரர்களுக்கு மான்ய மளிக்கலாம். இந்தச் சட்டத்தை சர்க்கார் தாமதமின்றிச் செய்தாக வேண்டும்."

#### காஞ்சி கல்யாணசுந்திரம்

பின்னர் காஞ்சி கல்யாணசுந்தரம் தொழில் திட்டம் என்பதுபற்றி விரிவாகப் பேசினார் அப்போது அவர் சொன்னதாவது:—

நமக்குத் தேவையான பொருள்களை நாமே செய்துகொள்ள வேண்டும். பூமிக்கடியில் ஏராளமான பொருள்கள் இருக்கின்றன. இவைகளைக் கஷ்டப்பட்டு எடுத்து, நம்முடைய உழைப்பின் மூலம் நமது தொழிலை மேம்பாடடையச்செய்யவேண்டும். மனிதன் நாகரீகமடையாத அந்த காலத்தால் கல்லையும், கட்டையும் ஆயுதமாகக் கொண்டிருந்தான். பின்னர்க் கிடைத்த மூலப் பொருள்களைக் கொண்டு, விஞ்ஞானத்தின் உதவியால் எண்ணற்ற கருவிகளை இன்று செய்து குவித்துள்ளான். இதே நேரத்தில் ஒரு சில கூட்டத்தார் கைத் தொழில் என்று கூறிக்கொண்டு கையில் தக்ளியுடன் காட்சியளிக்கிறனர். இந்த நிலைமை மாற வேண்டும். இயந்திரத்தின் மூலம் மக்களின் உழைப்பும் நேரமும் மீதப்படுகிறது. இதைத் தடுத்துவிட்டு, தங்கள் சுயநலம்வெற்றி பெறப் பாடு படுகின்றனர். இதற்கு மக்கள் இடமளிக்கக்கூடாது என்றார்.

#### கண்ணதாசன்

மதத்துவேஷிகள் என்று நம்மைத் தூற்றித் திரியும் காமராஜர்கள் சற்றுப் புராணங்களைப் புரட்டிப் பார்க்கவேண்டும். புராணங்களில் மட்டுமல்ல, பாரதியார் பாடிய பாடல்களில் கூட, அய்யனாரைக் கேலி செய்து பாடல்கள் இயற்றியுள்ளார். அவ்விதம் கேலி செய்த பாரதிக்கு மணி மண்டபம் எழுப்பியவர்கள், அதே கருத்தைச் சொல்லும் எங்களை வகுப்புத் துவேஷிகள் என்று கூறுவது என்?" என்று கேட்டார் கவிஞர் கண்ணதாசன் கூடியிருந்த கூட்டத்தைப்பார்த்து.

# ஆட்சிசெய்யும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலம் உயிர் வாழ முடியும் என்று கேட்கிறேன்.

## தமிழரசு-பண அரசான விந்தை

தமிழரசு என்ற ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் சில இடங்களிலிருந்து முழங்கிக்கொண்டிருந்த சிலர் சிலப்பதிகாரத்தையும், கண்ணகியின் கற்பையும் பற்றிப் பேசிடும் சிலர், பண ஆசை கொண்டு நாட்டிலே திரிகின்றார்கள். இவர்களைப் பற்றி மக்கள் உஷாராக இருக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் பக்தர்களுக்கு, கடவுள்கள் எது கேட்டாலும் தந்தார்கள் என்று புராணங்களில் படித்தோம். அதைப் போலவே இன்று குப்பைத்தொட்டி பேப்பரில், இன்ன இடத்தில் தி. மு. கழகத்தினர் கூட்டம் போடுகிறார்கள். ஆகவே உடனே 144 தடை உத்திரவு வேண்டும் என்று ஒரு அன்னக்காவடி எழுதினாலும், பக்தர்களுக்கு வரம் தந்த கடவுள்களைப் போல இன்றுள்ள மந்திரிமார்களே, 'அப்பனே இதோ பெற்றுக்கொள்' என்று வரம் தந்து விடுகிறார்கள். இதன் பலன் தான் குன்றத்தூரும், காரணமங்கலமும். ஆபாசப் பத்திரிகைகள் பல நாட்டிலே நடமாட விட்டு, எங்கள் நூலுக்கும், கூட்டத்துக்கும் தடை விதிப்பது நேர்மை அல்ல."

### சத்தியவாணிமுத்து அம்மையார்

அடுத்தபடியாகத் தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் பேசும்போது, அண்ணாத்துரையால் உரமிடப்பட்டு, எண்ணற்ற இளைஞர்களால் போற்றி வளர்க்கப்பட்டு, இன்று திராவிட முன்னேற்ற கழகம் செழித்து வளர்ந்து வருகிறது என்றார்.

### என். வி. நடராசன்

பின்னர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் "மதம் இந்த நாட்டிற்கு அவசியமா?" என்ற தலைப்பில் பேசும்போது காந்தியாரைச் சுட்டு வீழ்த்தியது மதவெறிதானென்றும், இன்னும் மத வெறியினால் பல சாம்ராஜ்யங்கள் சரிந்தன என்றும், இன்று போற்றப்படும் மதம் நாளை நமக்குக் கேடுபயப்பனவாக இருக்கிறது என்றும், ஆகவே இந்த நாட்டிலிருந்து, மதத்தை அடியோடு வெட்டி—வீழ்த்த வேண்டும்மென்றும் கேட்டுக்கொண்டார்

### சேலம் அ. சித்தையன்

பின்னர் சேலம் அ. சித்தையன் நாட்டு நிலை குறித்துப் பேசுகையில் சேலத்தில் இன்று கைத்தறி நெசவாளர்கள்படும் துயரத்தைப்பற்றியும், அரசாங்கத்தார் எடுக்கவேண்டிய நடவடிக்கையைப்பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அனைவரும் கைத்தறித் துணிகளையே வாங்கி ஆதரிக்க வேண்டுமாயும், நெசவுத் தொழில் நசித்துப்போகும் தறுவாயில் இருப்பதை உடனடியாகத் தடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

கடைசியாகத் தளபதி அண்ணாத்துரை அவர்களுக்கு அவ்வூர் பிரபலஸ்தர் தோழர் பரமசிவ முதலியார் கட்டாயப்படுத்தி மாலை அணிவித்தார்கள். பின்னர்ச் சிறிது நேரம் நாகூர் எம். இ. அனிபா, செல்லப்பன் ஆகியோர்களின் இன்னிசைக் கச்சேரிகளுடனும், இரவு அண்ணா, கே. ஆர். இராமசாமி குழுவினர் நடிக்கும் "நீதிதேவன்மயக்கம்" என்ற நாடகம் நடத்திக்காட்டப்பட்டது.

மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை இறுதியில் நன்றிகூற, கடந்த இரண்டு நாட்களாக வெகு சிறப்புடன் நடைபெற்ற மாநாடு இனிது முடிந்தது.

### தொண்டர்கள்

கடந்த இரு நாட்களிலும் தொண்டர்படைத் தலைவர்களான தோழர்கள் சி. பஞ்சாட்சரம், கே. டி. எஸ். மணி ஆகியோரின் தலைமையில் இருந்துவந்த தொண்டர்கள் செய்த சேவைகளையும் தோழியர் மூதாட்டி இராமாமிருதத்தம்மையார் தலைமையில் தோழியர்கள் அலமேலு அப்பாத்துரை, சத்தியவாணிமுத்து ஆகிய பெண் தொண்டர்களின் சேவைகளையும் என்றும் மறக்க முடியாது. மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளின் நலத்திற்காக இவர்கள் எடுத்துக்கொண்டஉழைப்பு மிகவும் பாராட்டத்தக்கது.

மாநாட்டின் முதல்நாளன்று திருச்சி தோழர் எம். எம். மாரியப்பா அவர்கள் தனது குழுவினருடன் வந்திருந்து இசைவிருந்தளித்தது மாநாட்டிற்கு ஒருபெரிய வெற்றி என்றே சொல்லவேண்டும்.

---

## நவதானியக் கோள்முதல் நிறுத்தப்படும்

சென்னை, டிச. 27—

சென்னை ராஜ்யத்தில் எல்லா ஜில்லாக்களிலும் நவதானியக் கொள்முதலை 1951 ஜனவரி 1-ந் தேதி முதல் நிறுத்திவிடுவதென்று சென்னை சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

---

## ரூ. 7½ லட்சம் மதிப்புள்ள வைரக்கல்

பிரிடோரியா, டிச. 27—

195 கேரட் எடையுள்ள நீலம் கலந்த வெள்ளை வைரக்கல் ஒன்று பிரிடோரியாவிற்கருகிலுள்ள பிரிமியர் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

இதே சுரங்கத்தில்தான் 1905-ம் வருஷத்தில் 3023 கேரட் உள்ள வைரக்கல் கிடைத்தது.

டிரான்ஸவால் சர்க்கார் இந்த வைரக்கல்லை ஏழாவது எட்வர்ட் மன்னருக்கு காணிக்கையாக அளித்தனர்.

இந்த வைரம் இரண்டாக செய்யப்பட்டு பிரிட்டிஷ் மன்னரின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்து வருகிறது.


பொங்கலன்று வெளிவருகிறது!

"புராக்கிரஸ்" (ஆங்கில வார இதழ்)

எல்லா ஊர்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

தனிப் பிரதி அணா. 2. வருட சந்தா ரூ. 6.

"புராக்கிரஸ்" அலுவலகம்

மண்ணடி :: சென்னை-1.



கட்டிட நிதிக்கு கலைவாணர் உதவும் கலை நிகழ்ச்சி!

"அழகிரி நினைவு மாளிகை" அமைக்க

திருவாரூர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கென

ஜனவரி 7உ ஞாயிறு மாலை 6 மணிக்கு

திருவாரூர் பேபி டாக்கீசில்

கலைவாணர்

திரு. என். எஸ். கிருஷ்ணன்

அவர்கள் தனது குழுவினருடன் நிகழ்த்தும்

'உத்தமர் காந்தி' (வில்லுப்பாட்டு)

'கிந்தனார்' (கதை)


## சென்னை மாகாண தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் மாநாடு

31-12-50 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வ. ஆ. மாவட்டம், வேலூர் இலட்சுமணசாமி டவுன் ஹால் மைதானத்தில் என். சிவராஜ் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது ராஜ போஜ், சூர்ய பிரகாசராவ், மண்டேல் இவர்கள் கலந்துகொள்வர்.

---

## தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

### 31—12—50

வளவனூர்
மா. இளஞ்செழியன்,

அக்கிப்பேட்டை (பெங்களூர் சிடி):
சி. பி. சிற்றரசு, புலவர் மணி, எழிலன், அ. கு. பஞ்சாட்சரம்.

சங்கரன்கோவில்
சி. என். அண்ணாதுரை.

### 1—1—51

திருநெல்வேலி
சி. என். அண்ணாதுரை

### 4—1—51

திண்டுக்கல்
சி. என். அண்ணாதுரை

## இனி நடப்பவை

சேலம்:—31-12-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-மணிக்கு அம்மாப்பேட்டை மெயின்ரோட் தி. மு. க. கிளைக் கட்டிடத்தில் எம். பி. வள்ளியப்பன் தலைமையில் பிரசாரக் குழு 'நமது கடமை' என்னும் பொருள் பற்றி டி. என். ராமலிங்கம், கே ராமசாமி மற்றும் பல தோழர்கள் பேசுவார்கள்.

* * *

பழைய கோட்டை:—31-12-50 கொடைக்கானல் நபிகள் நாயகம் பிறந்ததின விழாவில் பாலகுரு அவர்கள் பேசுவார்.

* * *

தூத்துக்குடி :—19—12—50-ல் வ. உ. சி. மைதானத்தில் இரா. நெடுஞ்செழியன் பேசுவதாய் இருந்த கூட்டம் அவர் வேண்டுகோள்படி 31-12-50-ல் நடைபெறும்.

* * *

கடையநல்லூரில் தி. மு. கழக சார்பாக 1-1-51-ல் நடக்கும் பொதுக் கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்.

* * *

புளியங்குடியில் தி. மு. க. சார்பாக 2-1-51-ல் நடக்கும் பொதுக் கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் கலந்துகொள்வார்.

Edited, Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I